**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.76/2021 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.குமார் |
| Father Name | திரு.கிருஷ்ணன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **16.03.2026.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனக்கு தமிழில் ஓரளவு எழுத மற்றும் படிக்கத் தெரியும். ஆங்கிலம் எனக்கு தெரியாது. நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மேஸ்திரி வேலையும், சிறு சிறு ஒப்பந்த வேலையும் செய்து வருகிறேன். சிறு சிறு ஒப்பந்த வேலை என்பதால் அதற்கு ஒப்பந்தப்பத்திரம் நான் ஏற்படுத்திக்கொள்வதில்லை. எனக்கு ஒரு சில மாதத்திற்கு ரூ.40,000/-வரையும், ஒரு சில மாதத்திற்கு ரூ.50,000/- வரையும் எனக்கு வருமானம் கிடைக்கும். எனக்கு கடந்த 2019-ம் ஆண்டு மாத வருமானம் என்ன கிடைத்தது என்று தற்போது சொல்ல முடியாது. அப்போது வந்த வருமானத்தை தோராயமாக என்னால் தற்போது சொல்ல முடியாது. என்னுடைய சொந்த ஊர் லாலாப்பேட்டை. நான் மேஸ்திரி வேலை செய்வதுடன் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலும் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு பிரதிவாதி பன்னீர்செல்வத்தை கடந்த 8 வருடங்களுக்கு முன்பிருந்து தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் ரூ.10 லட்சம் கிரையம் பேசி அதில் ரூ.7 லட்சத்தை முன்பணமாக நான் கொடுத்ததாகவும், பாக்கி ரூ.3 லட்சத்தை 2 வருட காலத்திற்குள் செலுத்த ஒப்புக்கொண்டதாகவும் உள்ளது என்றால் சரிதான். நான் மேஸ்திரி வேலை செய்து வந்த போது பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் நான் வேலை செய்த போதும், எப்போதாவது தேனீர் கடையில் தேனீர் குடிக்க செல்லும் போதும் அவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. எதற்காக பாக்கி ரூ.3 லட்சத்தை செலுத்த 2 வருட காலம் நிர்ணயம் செய்தேன் என்றால் நான் அதை நிர்ணயம் செய்யவில்லை. பிரதிவாதி தான் அதை நிர்ணயம் செய்தார். ஊரில் அவருக்கு கடன்கள் இருப்பதாகவும், அதை பைசல் செய்வதற்கும், அவர் குடியிருக்கும் வீட்டிலிருந்து வேறு இடத்திற்கு குடி போவதற்கும் அவகாசம் பிரதிவாதிக்கு தேவைப்பட்டதால் 2 வருட காலம் நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 07.06.2021-ம் தேதி பிரதிவாதியின் மனைவி எஸ்.மீரா என்பவர் எனக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால்

சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும், மீரா என்பவர் அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மீரா அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்தில் தற்போது வரை பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

நான் பிரதிவாதிக்கு ரூ.7லட்சம் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியில் வைத்து பணம் கொடுத்தேன். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் நகையை இந்தியன் வங்கியில் அடமானம் வைத்தும், என்னுடைய சேமிப்பு தொகையிலிருந்தும் பிரதிவாதிக்கு ரூ.7 லட்சம் பணம் கொடுத்தேன். அந்த நகைக்கடன் ரசீதை தேவைப்பட்டால் இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எந்த தேதியில் நகை அடமானம் வைத்தேன் என்று ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பிரதிவாதி என்னிடம் வந்து அவருடைய வீட்டை கிரையம் செய்ய இருப்பதாக சொன்னார். அதன் பிறகு ஒரு வாரத்தில் பிரதிவாதியும், அவரது மனைவியும் என்னிடம் வந்து மீண்டும் வீட்டை விற்பது பற்றி பேசினார்கள். அப்போது கிரையத் தொகை பேசி முடிவு செய்தோம். கிரையத் தொகை ரூ.10 லட்சம் என அப்போது தான் பேசி முடித்தோம். அந்த கிரையத் தொகை சரிதானா என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நானும் அதே ஊர் என்பதால் அந்த விலை எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதி 2019 ஜூலை மாதத்திலிருந்து 2021 மார்ச் மாதம் வரை மாதம் ஒன்றிற்கு ரூ.20,000/- செலுத்தினார் என்றால் சரியல்ல. என்னுடைய மிரட்டலுக்கும், வட்டி நெருக்கடிக்கும் பயந்து பிரதிவாதி ஊரை விட்டு 2021-ல் ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. நான் பார்க்கும் போதெல்லாம் அவர் வீட்டில் தான் இருந்தார். ரூ.7 லட்சத்திற்கு நான் வருமான வரி செலுத்தவில்லை. பிரதிவாதி என்னிடம் ரூ.7லட்சம் பணத்தை கடனாக தான் வாங்கினார் என்றாலும், அடமான கடன் பத்திரம் பதிவு செய்வதாக சொல்லி அவரை சார்பதிவாளர் அலுவலகம் அழைத்து சென்று கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.